**B-FIT GYM**
Ladies,Gents,Children
Fitness Centre
**Weight Reduction, Height gaining, Weight gaining, Body shape, Inches loss, Body fitness**
**HAMEEDIA SHOPPING MALL**
IInd Floor, No.108,109, Triplicane
High Road,Chennai - 600005.
**Ph : 044-42663307**
**Cell : 98417 07251**

TRIPLICANE, CHEPAUK, MYLAPORE, ROYAPETTAH

# TRIPLICANE NEWS

# டிரிப்ளிகேன் நியூஸ்

மலர் - 5 இதழ் - 14 16 - 07- 2009 (16- 31) (மாதமிருமுறை) பல்சுவை இதழ்
நிறுவன ஆசிரியர் : **A. பாக்யராஜ்,** இணை ஆசிரியர் : **S. சஜீவகுமார்**

**பரத் சங்கித் நிகேதன்**
இசை நாட்டியப் பள்ளி
73, டி.பி.கோயில் தெரு, முதல் சந்து, சென்னை-600 005.
**போன் : 4356 8169, 2848 0931,**
**செல் : 99411 24431**
**வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், தபலா, டிரம்ஸ், கீபோர்டு, வயலின், கிடார் ஆகியவை கற்றுத் தரப்படும்**

## அம்மனும் ஆடியும்

**த**மிழ் மாதங்களில் ஒன்றான 'ஆடி' அம்மனுக்குரிய மாதமாகப் போற்றப்படுகிறது. இம்மாதத்தைக் கணக்கிட்டே தெய்வீகப் பண்டிகைகள் தொடங்குகின்றன.

பூமாதேவி அம்மனாகப் பூமியில் அவதரித்து ஆடிமாதத்தில் என்பதால் ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை வடதிசையில் பயணம் செய்து வந்த சூரியன் அடுத்த 6 மாதம் காலத்திற்கு (ஆடி முதல் மார்கழி வரை) தன் பயணத்தைத் தெற்கு திசையில் தொடங்குகிறான். இக்காலம் தட்சிணாயண புண்ணியகாலம் என்று அழைக்கப்படுகிறது.

காற்றும், மழையும் ஆடி மாதத்தில் அதிகமாக இருக்கும். காற்றை காளியும், மழையை மாரியம்மனும் கட்டுப்படுத்துகின்றனர்.

இதனால் அம்மன் அருள் வேண்டி ஆடி வெள்ளிக் கிழமைகளில் அம்பிகை வழிபாடு நடைபெறுகிறது.



முற்காலத்தில் அரியும், சிவனும் ஒன்று என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காகப் பார்வதி தேவி புன்னைவனத்தில் தவம் இருந்தார். அவரது தவத்தைப் பாராட்டி சிவனும், விஷ்ணுவும் ஆடி மாத பௌவுர்ணமியன்று சங்கர நாராயணராகக் காட்சி அளித்தார்.

அம்பிகை தவம் இருந்த இடம் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் ஆகும். இது நெல்லையில் இருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

இங்கு சுவாமி சங்கரலிங்க மூர்த்தியாக எழுந்தருளி அம்பிகையை மணந்து கொண்டார்.

பார்வதி தேவியின் தவத்தை மெச்சிய பரமசிவன் ஆடிமாதம் அம்மன் மாதமாக இருக்க வேண்டும் என்று வரம் கொடுத்தார். இதனால் இம்மாதம் அம்மனுக்கு உகந்த மாதமாக போற்றி வணங்கப்படுகிறது.

திருமணம் ஆகாத பெண்கள் இம்மாதத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தங்களுக்கு நல்ல கணவர் கிடைக்க வேண்டி கோவிலுக்குச் சென்று கூழ்வார்த்து வழிபட்டு வருகின்றனர்.

ஆடிக்கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடிப்பெருக்கு, ஆடிப்பூரம், வரலட்சுமி விரதம் ஆகிய விழாக்கள் இம்மாதத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்கள் ஆகும்.

ஆடி மாதத்தில் மாரியம்மன் கோவில்களில் விசேஷமான பூஜைகளும், விழாக்களும் நடைபெறும். கிராமப்புறத்தில் காவல் தெய்வமாக விளங்கும் சுடலைமாடன், ஐயனாரப்பன், மதுரைவீரன், மாடசாமி, கருப்பண்ணசாமி போன்ற கிராம தேவதைகளுக்குப் பூஜைகளும், விழாக்களும் நடைபெறும்.

சங்கரன் கோவிலில் 12 நாள்கள் அம்மனின் ஆடி தபசு திருநாள் அதிவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதத்தில் மதுரை பகுதியில் 10 நாள் நடைபெறும் முளைப்பாரி திருவிழா குறிப்பிடத்தக்கது. இத்திருவிழாவின்

**CHENNAI REAL PROMOTERS (P)LTD**
**திருவல்லிக்கேணி**
**அங்கீகாரம் பெற்ற வீட்டுமனைகள் விற்பனைக்கு**
**சந்தோஷ் கார்டன் – அரக்கோணம்**
**அனைத்து வசதிகளும் அடங்கிய ஒரு அற்புத வீட்டுமனை யாரும் கொடுக்க முடியாத மிக குறைந்த விலையில்**
❑ சுவையான குடிநீர் ❑ சுகாதாரமான காற்றோட்டம் ❑ அகன்ற சாலை வசதி
❑ உடனடியாக வீடுகட்டி குடியேறலாம்





❖ 600 ச.அடி, 1200 ச.அடி, 2400 ச.அடி, மனைகளாகவும் கிடைக்கும் ❖ ஒவ்வொரு மனையிலும் இரண்டரை வருடத்தில் பலன் கொடுக்கும் தென்னங்கன்றுகள் உள்ளன. ❖ அதை பராமரிக்க பணி ஆட்கள் உள்ளனர் ❖ சுற்றிலும் இரும்புவேலி (வலை) பாதுகாப்பு ❖ நுழைவுவாயிலில் பிரம்மாண்டமான இரும்பு கேட் ❖ 24 மணி நேர செக்யூரிட்டி
**இத்தனை வசதிகளும் அடங்கிய ஒரு அற்புத வீட்டு மனை ஒரு சதுர அடி விலை ரூ. 84/- மட்டுமே.**
**ரூபாய் 30,000/- மட்டுமே முன்பணமாக செலுத்தி மனையை தங்கள் பெயருக்கே பத்திரப்பதிவு செய்து கொள்ளும் சிறப்பு வசதியும் உண்டு. வட்டியில்லா சுலப தவணை! மனையை பார்வையிட இலவச வாகன வசதி**
மேலும் விபரங்களுக்கு
**V. சுந்தர்**
**9884919299**
**உங்கள் கனவு மனையை கம்மி விலையில் வாங்க!**
**சென்னை ரியல் புரோமோட்டர்ஸ்க்கு வாங்க!**
**எண். 238/2/4, முதல்மாடி திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ரத்னா கேப் பேருந்து நிறுத்தம் அருகில், சென்னை - 600005**


**just fresh** for daily needs
*The Complete Food store*
**FRESH JUICES**
**FRESH VEGETABLES**
**PROVISIONS**
**ICE CREAMS**
**BOMBAY CHATS**
**POPCORNS**
**AMERICAN STEAM CORN**
**FRENCH FRIES**



**All Cards are Accepted**
**FREE HOME DELIVERY**
**Call : 28486666**
**No.191/382, Triplicane High Road, Triplicane, Ellaiamman Koil Backside, Chennai - 5**


CHENNAI FASHION
Ladies Tailoring & Designing,
Cosmetics, Burkha,Fancy Jewellery
# 101, Jani Jahn Khan Road,
Royapettah, Chennai - 14

9884141685, 9962112545

ஏ.ஏ.எலக்ட்ரிகல் சர்வீஸ் சென்டர்
A.A.ELECTRICAL & SERVICE CENTRE
- வீடு மற்றும் வியாபார ஸ்தலங்கள் அனைத்திற்கும் ஒயரிங் செய்து தரப்படும் சிறிய வேலைகளாக இருந்தாலும் செய்து தரப்படும்
- அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் பொருட்களும் சர்வீஸ் செய்து தரப்படும் வீட்டிற்குத் தேவையான அனைத்து எலட்ரிக்கல் பொருட்களும் கிடைக்கும்
ஏ.அத்திக், உரிமையாளர்
5/3, ஜெனரல்சாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
போன் : (Off) 044-39165858, 9884326678,
(Res) 93807 79072, Credit card Accept


Md.Kasim SANTHI MEDICALS

MEDICAL & GENERAL
No.98, (New No.225), Pycrofts Road,
Royapettah, Chennai - 600014.
Cell : 9884220116, Ph : 28482307
FREE HOME DELIVERY

Good Luck Travel Links
A.O. Mohamed Sharbudeen
Mobile : 94440 81851
Email : goodlucktravellinks@yahoo.com
www.goodlucktravellinks.com
Landline : 91 44 28447682
91 44 4356 7869
Tele Fax : 91 44 28447869
Cabs (A/c & Non A/c Vehicles) Package Tours, Tickets (Bus, Train, Air), Hotel Reservations, Visa, Noc.Mobile Recharge & Accessories, Easy Bill Ltd., (Authorised Bill Collection Center)

# 7/4, Venkatachalam Chetty Street, Triplicane, Chennai - 600005

போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் புதிதாகத் திருமணம் செய்தவர்களுக்கு இம்மாதம் திண்டாட்டத்தை உண்டாக்கிவிடும்.

மணமகளின் பெற்றோர் மணமகளை மணமகன் வீட்டில் இருந்து தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து விடுவர். பின்னர் மகளை மாமியார் வீட்டுக்கு அனுப்பும்போது ஆடி அரிசி, பலகாரம், சீர்வரிசை கொடுத்து அனுப்புவர்.

ஜவுளிக்கடைகளிலும், நகை கடைகளிலும் இம்மாதத்தில் தள்ளுபடி சலுகைகள் அறிவிப்பது சிறப்பம்சம்.

## ஆடிக்கிருத்திகை

ஆடி மாதத்தின் முதல் பண்டிகை ஆடிக்கிருத்திகை. இது முருக கடவுளுக்கு உகந்த விழா. அன்று முருக பக்தர்கள் மலர் காவடி எடுத்து சென்று முருகன் கோவில்களில் செலுத்துவர்.

## அம்மன் கோவில்களில் கூழ் படைப்பது ஏன்?

தவத்தில் சிறந்து விளங்கிய ஜமதக்னி முனிவரை பொறாமை காரணமாக, கார்த்த வீரியார்ச்சுனனின் மகன்கள் கொன்று விடுகின்றனர். இதைக் கேள்விப்பட்டுத் துக்கம் தாங்காமல் ஜமதக்னி முனிவருடைய மனைவி ரேணுகாதேவி உயிரை விட முடிவு செய்து தீயை மூட்டி அதில் இறங்குகிறார்.

அப்போது இந்திரன் மழையாக மாறி தீயை அணைத்தான். தீக்காயங்களால் ரேணுகாதேவிக்கு உடல் முழுவதும் கொப்பளங்கள் ஏற்பட்டன. வெற்றுடலை மறைக்க அருகில் இருந்த வேப்ப மர இலையைப் பறித்து ஆடையாக அணிந்து கொண்டார்.

ரேணுகாதேவிக்குப் பசி அதிகமானதால் அருகில் இருந்த கிராம மக்களிடம் சென்று உணவு கேட்டார். அதற்கு அவர்கள் பச்சரிசி மாவு, வெல்லம், இளநீர் ஆகியவற்றை வழங்கினர்.

இதைக்கொண்டு ரேணுகாதேவி கூழ் தயாரித்து உணவருந்தினார். அப்போது சிவபெருமான் தோன்றி ரேணுகாதேவியிடம், உலக மக்கள் அம்மை நோய் நீங்க நீ அணிந்த வேப்பிலை சிறந்த மருந்தாகும். நீ உண்ட கூழ் சிறந்த உணவாகும். இளநீர் சிறந்த நீராகாரம் ஆகும் என்று வரம் அளித்தார்.

இந்தச் சம்பவத்தை நினைவு கூரும் விதத்தில் தான் ஆடி மாதத்தில் அம்மன் கோவில்களில் கூழ்வார்க்கும் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## சுபகாரியம் செய்ய ஆடிமாதம் தடையா?

திருமணம், புதுமனை புகுவிழா போன்ற சுபகாரியங்கள் செய்ய ஆடி மாதம் ஏற்றதல்ல என்று கூறப்படுவதுண்டு.

ஆடிமாதத்தில் திருமணம் நடைபெற்றால் 10 மாதம் கழித்து சித்திரை மாதத்தில் குழந்தை பிறக்கும்போது வெப்பம் அதிகமாக இருக்கும். அந்த மாதத்தில் குழந்தை பிறந்தால் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறையும். இதனால் ஆடி மாதத்தில் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்தனர்.

மேலும் ஆடி மாதத்தில் தெற்குத் திசையில் பூமி நகரும் போது விஞ்ஞான ரீதியாக நில அதிர்வுகளும், கடல் சீற்றமும் ஏற்படும். அதிக காற்று வீசும், பலத்த மழை பெய்யும். அதனால் மனையடி கோலம், கிரக பிரவேசம் போன்றவற்றைச் செய்வதில்லை.

## ஆடிப்பெருக்கு

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி.

ஆடி மாதங்களில் மலை அதிர்வுகளால் நீர்ப்பெருக்கு உண்டாகி எல்லா நதிகளிலும் நீர் வரும். இதை நம்பி தான் விவசாயிகள் விதை விதைப்பார்கள்.

விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்காக ஆடி பதினெட்டில் கற்பூரம் ஏற்றி ஆற்றில் விட்டு வழிபடுவர். காவிரி ஆற்றில் இம்மாதம் வெள்ளப் பிரவாகம் இருக்கும்.

காவிரிக் கரையில் சுமங்கலி பெண்கள் ஒன்று திரண்டு மங்கலப் பொருட்களை ஆற்றில் விடுவார்கள்.

அதிகாலை 4 மணிக்கே புதுமணத் தம்பதிகள் காவிரி கரைக்குச் சென்று எண்ணெய் தேய்த்துத் தலையில் அருகம் புல், வெற்றிலை பாக்கு, வாழைப்பழம் வைத்து ஆற்றில் மூழ்கி குளிப்பர்.

பின்னர் அவர்கள் அணிந்து இருந்த ஆடையை அங்கேயே களைந்து விட்டு, புத்தாடை அணிந்து கரையோரம் உள்ள காவல் தெய்வம் சன்னிதிகளுக்குச் சென்று பூஜை செய்து வழிபடுவர். பெண்கள் மாங்கல்ய பூஜை செய்து புதுதாலி கயிறை அணிந்து கொள்வர்.

ஒகேனக்கல், மேட்டூர், பவானி, திருச்சி, தஞ்சை போன்ற காவிரி கரையோர பகுதிகளில் ஆடி பதினெட்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்படும்.

## ஆடி அமாவாசை

தட்சணாயண புண்ணிய காலத்தில் வருகிற முதல் அமாவாசையான ஆடி அமாவாசையன்று இறந்துவிட்ட தங்கள் மூதாதையர்களுக்குத் தர்ப்பணம் (பிதுர்கடன்) கொடுத்தால் அது அவர்களைச் சென்றடைகிறது என்பது ஐதீகம். அன்று கடல், ஆறு போன்ற நீர் நிலைகளில் தர்ப்பணம் கொடுப்பர்.

ராமேஸ்வரம், வேதாரண்யம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கானோர் திதி கொடுப்பர்.

ஆடி அமாவாசை தினத்தன்று சிவபெருமான் மார்க்கண்டேயரை காப்பாற்றுவதற்காகத் தனது இடது காலால் தர்ம தேவதையை (எமன்) உதைத்தார்.

சிவனின் உதையின் வேகத்தில் எமன் நரகலோகம், சொர்க்கலோகம் ஆகியவற்றின் வாசற் கதவை உடைத்துக் கொண்டு வெகுதூரத்தில் போய் விழுந்தார். இந்த நேரத்தில் பிதுர்க்கள் நரகலோகத்தில் இருந்தாலும், சொர்க்கலோகத்தில் இருந்தாலும் பிதுர்கடன் அவர்களைச் சென்றடையும்.

ஆறு, குளம், கடல் போன்ற நீர் நிலைகளில் எள், மாவு, பிண்டம் ஆகியவற்றை மீன்களுக்கு இரையாக தர்ப்பணம் கொடுத்தால் நீரில் சேர்க்கும் பொருள் ஆவியாகப் போய் பிதுர்களைச் சென்றடைவதாக ஐதீகம்.

## ஆடிப்பூரம்

ஆடிப்பூரம் ஆண்டாளின் அவதாரத் திருநாள்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் பரந்தாமனையே சேவித்து அவர்களிடமே ஐக்கியமானாள்.

ஆண்டவனை அடைய பொன்னும், பொருளும் தேவை இல்லை. மிகச்சிறந்த பக்தி இருந்தால் போதும் இறைவனை அடையலாம் என்ற உயரிய தத்துவத்தை உணர்த்துவதே ஆண்டாள் அவதாரத்தின் நோக்கமாகும்.

இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆடிப்பூரத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

## வரலட்சுமி விரதம்

வரலட்சுமி விரதம் ஆடி மாதம் சுக்லபட்சத்து வெள்ளிக்கிழமையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

எட்டு வகை செல்வங்களுக்கும் அதிபதியான ஸ்ரீமகாலட்சுமியை நினைத்துப் பூஜை செய்யப்படுவதால் இவ்விரதம் வரலட்சுமி விரதம் என்று பெயர் பெற்றது.

இந்த விரதம் மேற்கொண்டு லட்சுமி தேவியைப் பூஜை செய்தால் குடும்பத்தில் குதூகலம், நீடித்த ஆயுள், அன்பு, புகழ், அமைதி, இன்பம், ஆரோக்கியம் கிடைக்கும்.

திருமணமான ஒவ்வொரு பெண்ணும் அவசியம் அனுஷ்டிக்க வேண்டிய விரதம் இது.

சுமங்கலி பெண்களுக்கு மாங்கல்ய பலம் கிட்டும். கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவர் அமைவர்.

வரலட்சுமி விரதத்தை சந்தியாகால வேளையில் தொடங்க வேண்டும்.

பூஜையை முதல் வெள்ளிக்கிழமை செய்ய வசதி இல்லாதவர்கள் மறு வெள்ளிக்கிழமை செய்ய வேண்டும்.

ஒருமுறை செய்ய ஆரம்பித்து விட்டால் வருடம் தோறும் செய்ய வேண்டும்.

வரலட்சுமி விரதம் இருப்பதால் கர்மநோய்கள் நீங்கள்.

திருமணத் தடை அகலும். குழந்தை செல்வம் உண்டாகும்.

# குமரன் டிரேடர்ஸ்

**எண்.134, ஜானிஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 14**

## போன் : 28486622, 64590991, 9282404626






**திருவல்லிக்கேணி, ஜானிஜான்கான் ரோடு, எண். 134ல் புதிய அரிசி கடை திறந்து உள்ளோம்.**

எங்களிடம் கல், குருணை, கருப்பு நீக்கப்பட்டு சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட, புழுங்கல் அரிசி, பச்சை அரிசி, ஸ்டீம் அரிசி, இட்லி அரிசி மற்றும் அனைத்துவிதமான பாசுமதி அரிசிகளும் சிவாஜி, கிருஷ்ணா, கோகுல், சுடர்விளக்கு, ஒளிவிளக்கு போன்ற முன்னணி பிராண்ட்களும், பாசுமதி வகைகளில் டிராபி ராயல், இந்தியாகேட், நபீஸ், அபீப், லட்சுமி, லால்கிலா, டபுள்டீர், சுப்ரீம் கோல்டு போன்ற முன்னணி பிராண்ட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

வீடுகள், ஓட்டல்கள், கேன்டீன், கேட்டரிங், பாஸ்ட்புட், பிரியாணி கடைகளுக்கும் தேவையான அனைத்து ரக அரிசிகளும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

**இலவச டோர் டெலிவரி செய்யப்படும்**

## அருள்மிகு எல்லையம்மன் ரேனுகா பரமேஸ்வரி திருக்கோயில் திருப்பணிக்கு உதவுவீர்



அருள்மிகு எல்லையம்மன் கோயிலின் திருப் பணிக்கு ரூபாய் 75,00,000 லட்சம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகவே பொது மக்களும் ஆன்றோர்களும் நண்பர்களும் மனமுவந்து கோயிலின் திருப்பணிக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

மேலும் பக்தர்கள் கோயிலின் திருப்பணிக்காக நிதி உதவி மட்டுமல்லாமல் கோயிலுக்குத் தேவையான செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் போன்றவற்றையும் தங்களால் இயன்ற அளவு வாங்கித் தரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


# அஸ்கர் பயிற்சி நிறுவனம்

நிறுவிய ஆண்டு - 1980
நிர்வாகம் அஸ்கர் கல்வி டிரஸ்ட் - முஸ்லீம் சிறுபான்மை கல்வி நிறுவனம்
102, டாக்டர் பெசன்ட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14

| +2 STATE BOARD & CBSE | X STD STATE BOARD MATRIC ANGLO INDIAN BOARD & CBSE | X STD + 2 NIOS NATIONAL INSTITUTE OF OPEN SCHOOLING |
|---|---|---|

+2 பாடங்கள்
கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கம்ப்யூட்டர்
வணிகக் கணிதம், வணிகவியல், பொருளியல், கணக்கியல்
10ம் வகுப்பு
அனைத்து பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மீடியம்

Spoken English கற்றுத் தரப்படும்

தொடர்பு கொள்க : 9884326917



# NELLAI SOUP'S

100% Pure Vegeterian



- Tomato
- Mushroom
- Vegetable
- Plantainpith

மிக குறைந்த முதலீட்டில் மாதம் 8,000 ரூபாய்க்கு மேல் வருமானம் பெற எங்களை அணுகவும்

Contact : 044-28475757,
Cell : 9094777272, 9094776868

NS ASSOCIATIES
No. 25/10, Mohammed hussain Khan Lane,Royapettah, Chennai - 600014


## கற்கும் பழக்கம்

படிப்பதற்கு வயதே இல்லை; கற்கும் பழக்கம் உடையவர்களுக்கு முதுமை கூட தெரிவதில்லை; கற்கும் பழக்கம் இருந்தால் எப்போதும் ஒரு நல்ல நண்பன் கூடவே இருப்பது போல் ஆகும்; கண்டதைப் படித்தால் பண்டிதனாவான் என்பது பழமொழி. படிக்கும் புத்தகம் நல்லவகையாக இருத்தல் வேண்டும். அதுவும் இளமையில் கல்.

- எதைப் படித்தாலும் புரிந்து படிக்க வேண்டும்.
- தெரிந்த மொழியில் படிப்பது நல்லது.
- தினமும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும்.
- காலையில் செய்திகள், பின் படிக்கும் படிப்பு, உலகப்பிரகாரமான செய்திகள், மற்ற நூல்கள், கதை, கட்டுரை, சரித்திரம், ஆன்மிகம், மருத்துவம் இப்படி எதை வேண்டுமானலும் படித்து மனதில் நிறத்துவது நல்லது.

☒ **செய்யக் கூடாதது**

- வன்முறையை உண்டாக்கும் புத்தகத்தைப் படிக்க கூடாது.
- மனதைத் தூண்டும், கெடுக்கும் புத்தகத்தை படிக்க கூடாது.

மேற்கூறிய அத்தனை பழக்கக் வழக்கங்களும் தனிமனித சுகாதாரத்தை வெளிப்படுத்துபவைகளாகும்.


Aachi BILAL

ஜாம்பஜாரில் ஓர் இனிய உதயம்

# அல் ஹலால் டெய்லி பிரஷ்

(ஹைஜீனிக் சிக்கன் சென்டர்)

அன்புடையீர்,
எங்களிடம் ஹலால் முறையில் சுத்தம் செய்து உலகத்தரம் வாய்ந்த கோழிகறிகள் மொத்த விலைக்கும் சில்லறைக்கும் விற்பனை செய்கின்றோம். வீட்டு விசேஷங்களுக்கு ஆர்டரின் பேரில் சப்ளை செய்யப்படும். டோர் டெலிவரி இலவசம்

தினமும் இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
1 கிலோ கோழி கறிக்கு ரூ.5/-மதிப்புள்ள 2 பாக்கெட் ஆச்சி சிக்கன் மசாலா இலவசம்.
1/2 கிலோ கோழி கறிக்கு ரூ.5/-மதிப்புள்ள 1 பாக்கெட் ஆச்சி சிக்கன் மசாலா இலவசம்.

தங்களின் பேராதரவை நாடும் :




அல் ஹலால் டெய்லி பிரஷ்
ஹைஜீனிக் சிக்கன் சென்டர்
எண்.5/3, ஜெனரல் சாமி தெரு, ஜாம்பஜார்,
(வாழைப்பழ மார்க்கெட் அருகில்)சென்னை – 600 005.
போன் : 044 - 6555 5663

தலைமை : குரோம்பேட்டை
எங்களது கிளைகள் : பல்லாவரம், வேளச்சேரி
விரைவில் : மண்ணடி மற்றும் உங்கள் பகுதிகளிலும்
செல் : 9884377853, 9840150331



# C.S.K. MEGA CATERING SERVICES

*All Function Catering Contractor*




கல்யாண வைபவங்களுக்கும் வீட்டில் நடக்கும் எல்லா சுப நிகழ்ச்சிகளுக்கும் நல்ல தரமான முறையில் அறுசுவை ருசியுடன் சுத்தமான சைவை உணவு செய்து தரப்படும். உரிமையாளர் : C.S. கிருஷ்ணன்

No. 51/6, Venkatachalam Street, Triplicane, Chennai - 5
Res : Old No.10, New No.26, Theetharappan Street, (Rathna Cafe Backside) Pycrofts Road, Triplicane, Chennai - 600 005.
Mobile : 92821 37278, 6537 1644




# JB

## பேட்டரி சேல்ஸ் & சர்விஸ்

Authorised Dealer : EXIDE SF AMARON
இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள் கிடைக்கும்.
மின்சார தடையா? கவலை வேண்டாம்
(புதிய UPS மற்றும் இன்வெர்ட்டர்கள்)
மற்றும் UPS, இன்வெர்ட்டர் பேட்டரிகளும் சேல்ஸ் சர்வீஸ்



300 VA to 5 KV



புது எண் : 11, பழைய எண்.6, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, இராயப்பேட்டை, (ஜாம்பஜார் அருகில்) சென்னை - 600014.
(All Master Card Accepted)
செல் : 98408 88051, 97108 80700, 32432230



A/C Show Room

BIS 916
HALL MARK
JEWELLERY

# PINKY JEWELLERS

# பிங்கி ஜுவல்லர்ஸ்

தங்க
நகைகளின்
சங்கமம்!



5% Off On
916 KDM
jewellery

**916 BIS HALLMARK JEWELS**

Lowest Wastage Charges
No Making Charges

**NON KDM JEWELS**

NoWastage Charges
No Making Charges

All Birth Lucky Stones Available
We Accept all Credit and Debit Card
We have also introduced a
Monthly Saving Scheme

No.42/95, Pillaiyar Koil Street, Triplicane,
Chennai - 600 005. (Near Zambazaar Market)
Ph : 28612062, 43568780,
Cell : 9444044864, 9841174325

# VISHALAM BUILDERS

**Off : No. 32, Pillaiyar Koil Street, Triplicane, Chennai - 600 005.**
**Ph : 2852 9413, 2842 0938, Cell : 9962607150, 9382833038**

# FLATS FOR SALE

**No.3/10, Krishnappa Street, Chepauk,**
**(near Oveyam Street) Chennai - 600005.**

- நீடித்து உழைக்க தரமான பொருட்களை கொண்டு சிறந்த Engineer மூலம் வடிவமைக்கப்படுகிறது.
- குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
- காற்று வெளிச்சம் உள்ளவாறு கட்டப்படுகிறது. Two Wheeler Parking, & Lift வசதியுடன் கட்டப்படுகிறது.
- நடுத்தர மக்களுக்காக உயர்தரமாக கட்டப்படுகிறது.
- Flat availability குறைவாக உள்ளதால் உடனே Booking செய்யவும்.
- Flat for available



# ஏ.டி.எம் கார்டு பிரச்சினைகள்

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக, வங்கிப் பணிகள் அனைத்தும், வாடிக்கையாளர்களின் கைக்குள் வந்துவிட்டன. வங்கிச் சேவைகளில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக ஏ.டி.எம். கார்டு வந்த பிறகு வசதி எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பிரச்சனைகளும் இருக்கின்றன.

ஏ.டி.எம். பயன்படுத்துவதில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அது குறித்து புகார் தெரிவிக்க ஒவ்வொரு வங்கியிலும் புகார் படிவமே தயாராக வைக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு பிரச்சினைகள் உள்ளன. அந்தப் புகார் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கியமான பிரச்சினைகள்....



ஏ.டி.எம். கார்டு மூலம் ஒருமுறை மட்டும் பணம் எடுத்தேன். ஆனால், இரண்டு, மூன்று தடவை பணம் எடுத்திருப்பதாக ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏ.டி.எம்.ல் பணம் எடுக்காமலேயே ரசீதில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

பரிவர்த்தனையை ரத்து செய்திருந்தும், ரசீதில் பணம் எடுக்கப்பட்டதாக பற்று வைக்கப்பட்டுள்ளது.

குறைவான தொகையை ஏ.டி.எம்.ல் எடுத்திருந்து, ரசீதில் அதிகமான தொகை வரவு வைக்கப்பட்டிருந்தால்....

ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தவே இல்லை. ஆனால், ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தி பணம் எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பிரச்சினைகளில் ஏதாவது ஒன்று ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தும்போது ஏற்பட்டிருந்தால், உடனே சம்பந்தப்பட்ட வங்கியில் தெரிவித்து, குறிப்பிட்ட புகார் படிவத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

சமீபத்தில் ஏ.டி.எம். கார்டைப் பயன்படுத்தி இதுபோன்றதொரு பிரச்சினையில் சிக்கிய ஒருவர் கூறியதாவது:

என் வங்கிக்கணக்கில் இருந்து பணம் எடுக்க வேறொரு வங்கியின் ஏ.டி.எம். மையத்தில் கார்டை செருகி, தொகையை டைப் செய்தேன். பணம் வரவில்லை. ஆனால் என் கணக்கில் 15 ஆயிரம் ரூபாய் பற்று வைக்கப்பட்டு விட்டது. இது பற்றி கணக்கு இருக்கும் வங்கியில் புகார் கொடுத்தேன்.

அடுத்த இரண்டு நாட்கள் கழித்து, டெபிட் கார்டை பயன்படுத்தி ஓட்டலில் குடும்பத்துடன் சாப்பிடச் சென்றேன். பில்லுக்கு டெபிட் கார்டை கொடுத்தபோது, வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்று திருப்பித் தந்துவிட்டனர்.

அப்போது என்னிடம் பணமும் இல்லை. பெரும் அவமானத்தோடு, ஒருவழியாக பணம் ஏற்பாடு செய்து ஓட்டலுக்கு பில் செலுத்தினேன்.

இது பற்றியும் குறிப்பிட்ட தனியார் வங்கியில் புகார் கொடுத்தேன். 15 நாட்களில் சரி செய்யப்படும் என்கின்றனர். அந்த இடைவெளியில் என் செலவுகளுக்கும், இ.சி.எஸ்.களுக்கும் எங்கிருந்து பணம் புரட்டுவது? வங்கியின் குற்றத்துக்கு நான் தண்டனை அனுபவிக்க வேண்டுமா?

இவ்வாறு அவர் குமுறினார்.

இத்தகைய குற்றச்சாட்டுகள் குறித்து, தனியார் வங்கி மேலாளர் ஒருவர் கூறியதாவது:

இதுபோல் ஏராளமான குற்றச்சாட்டுகள் வருகின்றன. இதற்கு முக்கிய காரணம், தற்போது ஏ.டி.எம். மையங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். எந்த வங்கி ஏ.டி.எம். மையத்தையும் பயன்படுத்தலாம் என்ற அறிவிப்பு வெளியான பிறகு, இந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துவிட்டது.

வாடிக்கையாளர்களின் அதிகளவு பயன்பாட்டுக்கு தகுந்த மாதிரி, ஏ.டி.எம். மையங்களின் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படவில்லை. இதனால் தான் தவறுகள் ஏற்படுகின்றன.

ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தும்போது எவ்விதமான தவறு ஏற்பட்டாலும், உடனே சம்பந்தப்பட்ட வங்கியில் புகார் செய்துவிட வேண்டும். புகார் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நாளில் இருந்து 12 முதல் 15 நாட்களுக்குள் சரிசெய்து கொடுத்துவிட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

மேலும், வங்கி கணக்கில் மாத சம்பளமோ அல்லது வேறு ஏதாவது வகையில் பணமோ பற்று, வரவு வைக்கப்பட்டால், அது குறித்து மொபைல் போனுக்கு எஸ்.எம்.எஸ் அல்லது இமெயில் தகவல் வருவதற்கான வசதியை பயன்படுத்துவது நல்லது.

இந்த வசதியைப் பயன்படுத்தினால் நம் கணக்கில் பணம் இருக்கிறதா, எவ்வளவு இருக்கிறது என்பது பற்றிய விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். இதனால், வெளி இடங்களில் டெபிட் கார்டை பயன்படுத்தும்போது பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

ஏ.டி.எம். கார்டை பாதுகாப்பாக பயன்படுத்துவது எப்படி?

வங்கியில் ஏ.டி.எம். கார்டு பெற்றவுடனே, உங்களது 'பின்' எண்ணை மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்களது 'பின்' எண்ணை யாருக்கும் தெரியப்படுத்தாதீர்கள்.

'பின்' எண்ணையும், ஏ.டி.எம். கார்டையும் ஒரு சேர வைக்காதீர்கள். முடிந்தளவு 'பின்' எண்ணை எங்கேயும் எழுதி வைக்காமல், மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

ஏ.டி.எம். மையத்தில் பணம் எடுக்கும்போது தொகையையோ அல்லது பின் எண்ணையோ தவறுதலாக டைப் செய்திருந்தால், முற்றிலுமாக, 'கேன்சல்' கொடுத்துவிடுங்கள். பின்னர் திரும்பவும் ஏ.டி.எம். கார்டை செருகி புதிதாக 'டைப்' செய்யுங்கள்.

ஏ.டி.எம். கார்டை தவறுதலாக மூன்று முறை செயல்படுத்தி விட்டால், அதன் பின்னர் உங்களது கார்டு முடக்கப்பட்டுவிடும்.

ஏ.டி.எம்.கார்டு தொலைந்து போனால், உடனே சம்பந்தப்பட்ட வங்கிக்கு அல்லது வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தில் புகார் செய்துவிட வேண்டும். அப்போதுதான், காணமல் போன ஏ.டி.எம்.கார்டை பிறர் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும்.

ஏ.டி.எம். கார்டின் பின்புறம் கையெழுத்து போடுவதற்கான பகுதியில், அவசியம் கார்டின் உரிமையாளர் கையொப்பம் போட வேண்டும். இதனால், கார்டை வேறு யாரும் பயன்படுத்த முடியாது.

ஏ.டி.எம். மையத்தில் பணம் எடுக்கும்போது தவறாக கள்ளநோட்டு வந்துவிட்டால், உடனே சம்பந்தப்பட்ட வங்கியில் புகார் கொடுத்துவிடுவது நல்லது.


## TRIPLICANE NEWS

கௌரவ ஆலோசகர்கள்:

T.T. முனுசாமி,
G. மோகனகிருஷ்ணன்,B.A.B.L.,
(செயலாளர்-சென்னை உயர்நீதிமன்றம்)
B. குமார்,M.A.B.L.,
D. கண்ணன்,M.L.,
S. கேசவன்,B.A.B.L.,
E. ராமண்ணா,M.A.B.L.,
T. தேவேந்திரன்,M.A.B.L.,
R.அப்துல் முபீன்,B.A.B.L.,
S. ராஜ்குமார்,B.A.B.L.,
வெண்ணிலா ராஜ்குமார்,

தலைமை நிருபர் :
ம.வெங்கடேசன்,M.A.

**TRIPLICANE NEWS :**
நிர்வாக அலுவலக முகவரி :
எண்.ப.எண். 14, புதிய எண்.43,
மல்லன் பொன்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
செல் : 94443 18719, 9940627772.
E-mail :
triplicanenews@yahoo.com


## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே!

தங்கள் பகுதியில் நடக்கும் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், ஆன்மிக நிகழ்ச்சிகள் போன்றவற்றை போட்டோவுடன் டிரிப்ளிகேன் நியூஸ் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கவும். தாங்களும் கதை, கவிதை, கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**


**AJAY MARKETING**
AJAY AQUA PACKAGED
DRINKING WATER

*Specialist in Gift Articles*
*H.O : 6/23, Agathimuthan St,*
*(Near Union Bank) Triplicane,*
*Chennai - 5.Ph : 42157327, 55349948*
*9840900631, 32, 33, 34*
*B.O : 23/2, Vadugu Street, Near Bazar Road,*
*Mylapore, Chennai - 600004. Ph : 98403 77004*
சுத்தமான, சுகாதாரமான, சுவையான குடிநீர் தரம் பலமுறை சுத்திகரிப்பு மற்றும் ஆய்வு பரிசோதனைகளை அடிப்படையாக கொண்டது. BIS ஆல் அங்கீகரிக்கப்பட்டது. உங்கள் தாகம் தணிக்க உங்கள் இல்லம் தேடிவர அணுகுங்கள்!
இலவச டோர் டெலிவரி!!

**OFFICE FOR RENT**
**270 Sq. with interior and Office Materials**
**Contact**
**Thameem Ansari**
**Cell : 9789822025**
2/57, Shaik Dawood Street
Royapettah, Chennai - 600014.
(Near Labbai Mosque)

**Tuitions for +1 & +2 Girls in Accounts/Commerce/ Economics at**
**Thanappa chetty St, Triplicane, Ch-5.**
**Contact :**
**U.Sujatha,M.Phil**
**044-64585599 / 9282421088**

# உடல் பருமனை குறைக்கும் வழிகள்....!

<u>டாக்டர் வெ. சீதாராமன்</u>

உடல் பருமன் இன்றைக்கு மருத்துவம் சார்ந்த ஒரு பிரச்சனை. மேல் மூச்சு, குறட்டை, வாயுதொல்லை, மூட்டு வலி என்று எதை சொன்னாலும் நடுத்தர வயதினருக்கு மருத்துவர் சொல்லும் முதல் அறிவுரை 'வெயிட்டை குறையுங்க' என்பதுதான். உடனே அதற்கு மாத்திரை, மருந்து உண்டா என்று கேட்பது பேதமை. உடல் பருமன், மரபு ரீதியாக வரலாம், தைராயிடு பாதிப்பாலும், சர்க்கரை வியாதியாலும், கட்டுப்பாடற்ற உணவு பழக்கங்களாலும் வரலாம், இன்னும் எத்தனை எத்தனை வழிகளில் வரலாம். ஆக நம் உடலை 'மாஸ்டர் செக்கப்' என்ற பரிசோதனைக்கு உட்படுத்தி அனைத்து உறுப்புகளின் செயல்பாட்டை கண்டறிந்தால் உடல் பருமனுக்கு ஏதாவது ஒரு அடிப்படை காரணம் தெரியவரும். கொழுப்பு, மாவுச்சத்து நிறைந்த உணவுகளை குறைத்து, புரதம், வைட்டமின் நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்து, சீரான உடற்பயிற்சி, நடைபயிற்சி மூலம் எடையை குறைக்க முடியும். உடலின் ஏற்பட்டுள்ள சர்க்கரை வியாதி, தைராயிடு தொந்திரவு போன்றவற்றுக்கு ஆயுள் முழுவதும் மாத்திரைகள் தேவை. டயட், உடற்பயிற்சி இருந்தால் எதையும் சாதிக்கலாம். டென்ஷனை குறைத்து தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்; மருத்துவரின் ஆலோசனையும் வேண்டும்.



**Air Cool Service**
Specialist in:
Air Conditioner, Washing Machine, Refrigeration and Microwoven
Sales & Service
New # 55, Old # 25, Cella Pillaiyar Koil Street, Royapetta, Chennai - 600 014.
*N.M. Ragu*
Cell : 9840077725, Off : 4356 7621

**துரைப்பாண்டியன்**
**சமையல்**
**கான்ட்ராக்ட் குக்**
பு.எண்.8, (ப.எண்.13), பொன்னப்பத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
**செல் : 98404 43002**

## மனிதன் மனிதனாக....!

வணங்க வேண்டிய தெய்வம் - தாய், தந்தை
மிக மிக நல்லநாள் - இன்று
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது - பணிவு
மிகவும் வேண்டாதது - வெறுப்பு
மிகப்பெரிய தேவை - நம்பிக்கை
மிகக்கொடிய நோய் - பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
கீழ்த்தரமான விஷயம் - பொறாமை
நம்பக்கூடாதது - வதந்தி
ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
செய்யக்கூடாதது - நம்பிக்கைத் துரோகம்
செய்யக்கூடியது - உதவி
விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்
உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவவிடக்கூடாதது - வாய்ப்பு
பிரியக்கூடாதது - நட்பு, நன்றி

**எஸ். சஜிவகுமார்**

## சிரிப்போ சிரிப்பு....!

கணவன் : கிராமத்துல அநாதையா இருந்த என் ஒண்ணுவிட்ட பாட்டி, கடைசி காலத்தில் என்கூட இருக்கணும்னு வர்றாங்களாம்!
மனைவி : பூர்வீக சொத்து வந்து சேரும்னு உங்க வாரபலன்ல போட்டிருந்தது கடைசில இதுதானா?

அவள் : சினிமாவுக்கு போக வரலியான்னு கேட்டா 'ராகு காலம்' போவட்டும்ன்றியே , இப்ப ஏது ராகு காலம்?
இவள் : உள்ளே வந்து உட்கார்ந்து என் கழுத்தை அறுக்கற என் மாமியாரை சொன்னேன்!

அவன் : கொடுக்கல் வாங்கல்ல உன் அண்ணன் பெரிய ஆளுன்றியே, பிரபல பைனான்சியரோ?
இவன் : இல்ல, பாக்ஸிங் சேம்பியன்!

அவன் : பொது இடத்திலே சிகரெட் பிடிக்கக்கூடாதுன்னு எனக்கும் தெரியும், ஆனா இது மொட்டை மாடி தானே?
இவன் : ஆனா இந்த பில்டிங்க இருக்கற பதினாறு ப்ளாட்டுக்கும் இந்த மொட்டை மாடி பொதுஇடம் தானே!

**டாக்டர் வெ. சீதாராமன்**

**AVAILABLE SHOP FOR RENT 120 Sqft GROUND FLOOR CONTACT IN PERSON**
28, Subadral St, Triplicane, Chennai 5.
**Cell No. 9840980149**

**Arranged loan for purchase of Vacant land, Home, constraction and Mortgage.**
**Interest Rate : 10.5% to 16%**
No.33/4 & 5, Jaiz Complex, 1st Floor, Triplicane High Road, (opp. to Big Mosque), Chennai - 600005.
**Ph : 044 - 28520056**
**Cell : 9382121639**
email : mrajaestate@yahoo.com

## ஜோக்கோ ஜோக்....!

அவள் : இருபத்தி நாலு மணி நேரமும் இடைவிடாம அரைக்கற 'கிரைண்டர்' ஏதாவது இருக்கா?
இவள் : வெளியிலே எப்படியோ தெரியலே, ஆனா என் வீடல என் 'மாமியார்' இருக்காங்க!

**டாக்டர் வெ. சீதாராமன்**


**தாய் ரியல் எஸ்டேட்**
**வீடுகள் வாங்க, விற்க வாடகைக்கு அனுகவும்**
எண் : 161/319, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, எல்லை அம்மன் கோயில் முன்புறம், ஐஸ்அவுஸ், சென்னை-5
**B.S.VASAN-9941172464**
**9841128212,43588555**
**S.SIVA - 9840075383**

**ஸ்ரீஅருள்மிகு வலம்புரி விநாயகர், பாலமுருகன், ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்**

திருவல்லிக்கேணி, டாக்டர் நடேசன் ரோடு, குதிரத்அலி மக்கான் தெரு, எண்.63ல் அமைந்துள்ள ஸ்ரீஅருள்மிகு வலம்புரி விநாயகர், பாலமுருகன், ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 11-7-09 அன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஊர் பொதுமக்கள், பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு அருள் பெற்றனர்.

**KING REAL ESTATE**
**கிங் ரியல் எஸ்டேட்**
K. **விஜயன்,** Cell : 9941472675
வீடு வாங்க, விற்க அணுகவும்
NO.25/13, தானப்ப செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5
எம்ப்ராய்டரிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்



TRIPLICANE NEWS FORTNIGHTLY REGISTRAR OF NEWSPAPER FOR INDIA. R.Dis.No. 1506/2004 TNTAM/2005/17705 விலை - ரூ.2/-




# CHENNAI REAL PROMOTERS (P)LTD

## திருவல்லிக்கேணி

Regd.off : AI-24, (Old No: AI-124), 8th Main Road, Shanthi Colony, Anna Nagar, Chennai - 600 040. Ph : 044-43016611, 43016461

# ஸ்ரீராஜமாதா நகர் - கும்மிடிப்பூண்டி

## DTCP அப்ரூவல் பெற்ற வீட்டுமனைகள் விற்பனைக்கு

**அனைத்து வசதிகளும் அடங்கிய ஒரு அற்புத வீட்டுமனை யாரும் கொடுக்க முடியாத மிக குறைந்த விலையில்!**

- சுவையான குடிநீர்
- சுகாதாரமான காற்றோட்டம்
- அகன்ற சாலை வசதி
- உடனடியாக வீடுகட்டி குடியேறலாம்



- கும்மிடிப்பூண்டி ரயில் நிலையத்திலிருந்து 3K.M.
- கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 2K.M.
- கும்மிடிப்பூண்டி சிப்காட்டிலிருந்து 200 மீட்டர்.
- உடனடி பத்திரப்பதிவு.
- பத்திரப் பதிவு முற்றிலும் இலவசம்.
- ஒரு சதுர அடி விலை ரூ.140 மட்டுமே.
- மனையை பார்வையிட இலவச வாகன வசதி.
- போன் செய்தால் போதும் விபரங்கள் வீடுதேடி வரும்.

**மேலும் விபரங்களுக்கு**

**Cell : 9787335566**

எண் 238/2/4, முதல்மாடி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ரத்னாகேப் பேருந்து நிறுத்தம் அருகில், சென்னை - 600005.

சுலப தவணையில் வீட்டுமனைகள் வாங்க! சென்னை ரியல் புரோமோட்டர்ஸ்க்கு வாங்க!

**32473337, 43567231, 43567241**

**எங்கள் நிறுவனத்திற்கு விற்பனை முகவர்கள் தேவை**


Owned, Published and Printed by A. Bakyaraj. Published from No.7, Ramasamy Maistry Street, Triplicane, Chennai - 5. and Printed at Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 5. Editor : A.Bakyaraj